எம்.சி.ஓபி.எண் : 1161/22 தேதி: 27/08/2024

எமசா : 1

பெயர் : சிங்காரவேலன்

த/பெயர் : ராமாமிர்தம்

வயது : 50

**எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி 1ன் முதல் விசாரணை**

நான் நாகப்பட்டினம் மாவட்டம் பாய்மேடு காவல்நிலையத்தில் சிறப்பு உதவியாய்வாளராக பணிபுரிகிறேன். இன்று எங்களது நிலைய ஆய்வாளருக்கு வந்த அழைப்பானையின் பெயரில் ஆஜர் ஆகியுள்ளேன். எங்களது நிலைய குற்ற எண் 1118/2020 முதல் தகவல் அறிக்கையின் படி இறுதி தகவல் அறிக்கை ஆஜர்படுத்தியுள்ளேன். அவைகள் முறையே எமசா ஆ1 மற்றும் எமசா ஆ2 ஆகும். இந்த வழக்கில் விசாரணைக்கு பின் Charge abeted என்று மேல் விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டது.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் நான் தான் விசாரணை அதிகாரி இலீலை என்றால் சரிதான். நீதிமன்றத்திலிருந்து ஆய்வாளருக்கு தான் அழைப்பானை வந்தது என்றால் சரிதான். ஆய்வாளரிடம் அதிகார கடிதம் பெற்று தான் சாட்சியம் அளிக்க வேண்டும் என்பது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. நான் கோப்புகளின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இறந்த நபர் குடிபோதையில் இருந்தார் என்பதற்கான குடிபோதை சான்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தோம் என்றால் இல்லை. இந்த வழக்கில் நான் நேரிடியாக விசாரணை ஏதும் செய்யவில்லை. இந்த வழக்கை பற்றி எனக்கு ஏதும் தெரியாமல் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் அதனால் எனது சாட்சியம் ஏற்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.